



பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13 வார்டு 172ல், நேருநகர், கருமாரியம்மன் கோயில் அருகில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 36 லட்சம் மதிப்பீட்டில், 172 வது வார்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு, சமூக விரோத செயல்களில் ஈடுபடும் நபர்களை கண்காணித்து காவல்துறை நடவடிக்கை எடுக்கவும், தெருக்களில் தேங்கும் மழை நீர், தெரு விளக்கு எரியாமல் இருப்பது உள்ளிட்ட மாநகராட்சி சமந்தப்பட்ட புகார்களை, கண்காணித்து உடனடி நடவடிக்கை எடுக்கும் வகையில் வார்டு முழுவதும் 120 எண்ணிக்கையிலான கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளதை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் மண்டலக்குழு தலைவர் இரா. துரைராஜ் முன்னிலையில் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், வட்ட கழக செயலாளர் நேருநகர் எஸ். பாட்சா, மாவட்ட பிரதிநிதிகள் வே. முருகன், ஜி. செல்வராஜ், வழக்கறிஞர் க. உமாபதி உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### பொன்குமார் தலைமை! முனைவர் கவிஞர் இரவி பாரதி எழுதிய

# ‘தமிழ்நாட்டின் தவப் புதல்வர் காமராஜர்’ நூல்!

### கோ. விசுவநாதன் வெளியிடுகிறார்! கி.வீரமணி - அமைச்சர் மா.சுப்பிரமணியன்-கு. செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ.-டி.கே.எஸ். இளங்கோவன் வாழ்த்துரை!

சென்னை, ஜூலை 14-

முனைவர் கவிஞர் இரவிபாரதியின் தமிழ்நாட்டின் தவப் புதல்வர் காமராஜர் எனம் நூல் வெளியீட்டு விழா நாளை (15.07.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணியளவில் தியாகராயர் நகர் சர்பிட்டி தியாக ராயர் அரங்கத்தில் (கண்ணதாசன் சிலை எதிரில்) நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய தலைவர் பொன்குமார் தலைமை வகிக்கிறார்.

வி.ஜி.பி. ரவிதாஸ், டாக்டர் சேதுகுமணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கலைமாமணி ஏர்வாடி இராதா கிருஷ்ணன் வரவேற்புரையாற்றுகிறார். இளம்பாரி உ. கருணாகரன் தொடக்கவுரையாற்றுகிறார்.

இந்நூலை வேலூர் வி.ஐ.டி. பல்கலைக் கழக வேந்தர் கவிக்கோ கோ. விசுவநாதன் வெளியிட்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

முதல் நூலை டாக்டர் வி.ஜி. சந்தோசம் பெற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

அடுத்து ஐந்து நூல்களை விஜய் வசந்த் எம்.பி., கே. டி.சீனிவாச ராஜா, இரவி, ரோமா ராஜன், கே.பி. வித்யாதரன் ஆகி.யோர் பெறுகின்றனர்.

விழாவில் மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் சி. எம். மீனாட்சி சோமசுந்தரம், எழுத்தோவியர் நாணா ஆகியோருக்கு சிறப்பு செய்யப்படுகிறது.

நூலாசிரியர் கவிஞர் இரவி பாரதி விளக்க உரையாற்றுகிறார்.

இவ்விழாவில் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, அமைச்சர் மா. சுப்பிரமணியன், கு. செல்வம் பெருந்தகை எம்.எல்.ஏ., டி.கே.எஸ். இளங்கோவன், ஏ.எம். விக்கிரமராஜா, எர்ணாவூர் நாராயணன், வி.பி. கலைராஜன், எஸ். ஜோயல், ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

பேராசிரியர் ராஜராஜன் நன்றி கூறகிறார். ஜான் தன்ராஜ் நிகழ்ச்சி நெறியாளராக இருந்து தொகுத்து வழங்குகிறார்.

இவ்விழாவினை விழாக் குழுத் தலைவர், விழாக் குழு உறுப்பினர்கள், விழா ஒருங்கிணைப்பாளர் ஒருங்கிணைக்கின்றனர்.

### மண் – மொழி – மானம் காக்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர்கள் சேர்க்கைப் பணிகளுக்காக

# அம்பத்தூர் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை, ஜூலை 14-

தமிழ்நாட் டின் மண் - மொழி - மானம் காக்க கழகத் தலைவரால் எடுக்கப்பட்ட சிறப்பு தீர்மானமான ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை பணிகளுக்காக அம்பத்தூர் தொகுதியின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (14.07.2025 - திங்கட்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7, செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் அம்பத்தூர் தொகுதிகளுக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறியுள்ளார்.

### மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருமங்கலத்தில்

# சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி-திண்டுக்கல் ஐ.லியோனி -சூர்யா வெற்றிகொண்டான்-ஜோஸ்பின் இலக்கிய ராணி சிறப்புரை!

மதுரை, ஜூலை13-

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பாக திருமங்கலத்தில் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டத்தில் ஆர்.எஸ்.பாரதி, திண்டுக்கல் ஐ.லியோனி, சூர்யா வெற்றி கொண்டான், ஜோஸ்பின் இலக்கிய ராணி உள்ளிட்டோர் எழுச்சி உரையாற்றினார்கள், அதன் விவரம்

மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பிலும் தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பிலும் நடைபெற்ற இந்த மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமை வகித்தார்

கழக அமைப்புச் செயலாளர், வழக்கறிஞர் ஆர்.எஸ் பாரதி எழுச்சியுரையாற்றி கழக அரசின் நான்காண்டு சாதனைகள் மற்றும் திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்களுக்கு செய்த மக்கள் நலத்திட்ட பணிகளையும், எதிர்கட்சிகளின் மக்கள் விரோத போக்கையும் எடுத்துக்கூறி நீண்ட எழுச்சி உரையாற்றினார்

மேலும் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, கழக வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் சூர்யா வெற்றிகொண்டான், கழக இளம் பேச்சாளர் ஜோஸ்பின் இலக்கிய ராணி உள்ளிட்டோரும் சிறப்புரை யாற்றினார்கள்

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் – அரசின் பல்வேறு சேவைகள் மக்களிடம் சென்றடைய

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் பல்வேறு சேவைகள் அடிமட்டத்தில் உள்ள அனைத்து மக்களிடமும் சென்றடைய வேண்டும் என்பதற்காக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கியுள்ள உள்ளாட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகின்ற 16.07.2025 - புதன்கிழமை மாலை 4.00 மணி அளவில், மறைமலைநகர் ஜி.எஸ்.டி.சாலையில் அமைந்துள்ள ஆழ்வார் திருமண மண்டபத்தில் எனது (தா.மோ. அன்பரசன்) தலைமையிலும் மாவட்ட கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., டி.மூர்த்தி மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், தாம்பரம் மாநகராட்சி மேயர், துணை மேயர், ஊராட்சி ஒன்றியக் குழு – நகராட்சி – பேரூராட்சித் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு - ஒன்றியக் குழு மாநகராட்சி - நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று இக்கூட்டத்தில் அவசியம் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்**:- “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் குறித்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மக்களிடம் நேரில் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துவது சம்பந்தமாக மற்றும் கழக ஆக்க பணிகள்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### முதல்வர் கல்லூரிகளைத் திறப்பதை கொச்சைப்படுத்துவதா?

# கோவையில் எடப்பாடி பழனிசாமியை கண்டித்து - இன்று கழக மாணவரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### மாணவரணிச் செயலாளர் இரா.இராஜீவ்காந்தி அறிக்கை!

சென்னை, ஜூலை 14 -

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி; ஏழை, எளிய, சாமானிய மாணவர்களுக்கு உயர்கல்வி பெற தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் கல்லூரிகளைத் திறந்து வைத்ததை கொச்சைப்படுத்தும் விதமாக கோவையில் பேசியிருக்கும் எடப்பாடி பழனிசாமியை கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் இன்று (ஜூலை 14ஆம் தேதி) “கோவை, டாடாபாத், சிவானந்தா காலனி”யில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும் என்று மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி; ஏழை, எளிய, சாமானிய மாணவர்களுக்கு உயர்கல்வி பெற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் கல்லூரிகளைத் திறந்து வைத்ததை “கல்லூரிகளைத் திறப்பது சதிச்செயல்” என பதவி சுகத்துக்காக பேரறிஞர் அண்ணாவை அடகு வைத்த எடப்பாடி பழனிசாமி இப்போது, “உங்களுக்கெல்லாம் எதற்கு கல்வி?” என்ற சங்கிகளின் குரலாய் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறார்.

கோவில்களுக்கு மக்கள் காணிக்கையாகக் கொடுக்கும் உபரி நிதியிலிருந்து கல்வி நிலையங்கள், சிறார், முதியோர் பராமரிப்பு நிலையங்கள், மருத்துவமனைகள் அமைக்கலாம் என்பது இந்து சமய அறநிலையத்துறையின் சட்டங்களில் ஒன்று. ஆனால் அதுகூடத் தெரியாமல் திராவிட இயக்கத்தின் துரோகியாக, கல்விக்காக திராவிட மாடல் அரசு எடுக்கும் முன்னெடுப்புகளைக் கொச்சைப் படுத்தும் விதமாக கோவையில் பேசியுள்ள எடப்பாடி பழனிசாமியை கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் இன்று (ஜூலை 14ஆம் தேதி,) பிற்பகல் 2.30 மணி அளவில், “கோவை, டாடா பாத், சிவானந்தா காலனி”யில், எனது தி.மு.க. (மாணவர் அணி செயலாளர் இரா.ராஜீவ்காந்தி ) தலைமையில் மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராம கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் அவர்களது தோழர்களுடன் பெருந்திரளாக பங்கேற்று, போராட்டத்தை வெற்றியடையச் செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## குமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுக நிகழ்ச்சி!





கன்னியாகுமரி, ஜூலை - 14

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநில துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு தலைமையில் நடைபெற்றது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் கலந்துகொண்டு ஆற்றவேண்டிய கழகப்பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும், இந்நிகழ்வில் சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து வழக்கறிஞர் தலைமைக் கழகச் செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைதளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து விக்னேஷ் ஆனந்த் ஆகியோர் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஆ. சீனுவாசன்

**ஜூலை 14 (2016)**



**இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**அச்சிறுப்பாக்கம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், பேரூர்ச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி, காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், அச்சிறுப்பாக்கம் வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய இயக்குநர் ஆகிய பதவிகள் வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சென்னை ஆயிரம்விளக்கு கலைஞர் நூலகத்தில் வாசகர் சந்திப்பு!





சென்னை,ஜூலை.14-

முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாளையொட்டி, சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் அவர் களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 11.07.2025 அன்று 111 (அ) வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் செ.ஜோதி இந்நிகழ்வில் கலந்துகொண்டு, கல்விக்காக திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை விளக்கினார். நிகழ்ச்சியின் நிறைவில், வருகை தந்த மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான இடம்பொருள் கலைஞர் புத்தகம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், ஆயிரம் விளக்கு மேற்குப்பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஜே.எம். எச்.இம்ரான், என்.மோகன் வேல், பகுதி துணை அமைப்பாளர்கள் ஆர்.அவினாஷ், அ.பா.கதிரவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## 12 வது ஆண்டு நினைவு நாள்



14.7.2013

திருமதி **எஸ்.துரைப்பாண்டிச்சி** அம்மாள்
(க/பெ. மறைந்த கலைமாமணி
**எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

**தாங்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும் எங்கள் மனதை விட்டு மறையவில்லை!**

மகன்கள்: **எஸ். சிதம்பரம், எஸ். கந்தகுமார், பூச்சி எஸ். முருகன்**
மற்றும் மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள்